**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 317 /2024**

**Deposition of P.W.** 3

Name : ரெஜு சிங்

S/o, D/o, W/o : ராஜா

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 15.10.2025**

**All Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் வாழவிளைமுக்கில் வசித்து வருகிறேன். கொத்தனராக வேலை பார்க்கிறேன். அ.சா.2 ராஜேந்திரனை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 05.06.2024ம் தேதி மாலை 07.00 மணிக்கு மணலிக்கரை சந்தையில் வைத்து ராஜேந்திரனிடம் அவரின் மனைவி சண்டை போட்டுக்கொண்டிருந்தார். கெட்டவார்த்தை போட்டு பேசினார். உன்னோடு வாழமுடியாது. நீ செத்தால் தான் நான் உயிரோடு இருப்பேன் என்று சொல்லி ராஜேந்திரனின் மனைவியுடன் இருந்த 1வது எதிரி கத்தியால் அ.சா.2ன் இடது பக்க வயிற்றில் குத்தினார். குடல் வெளியே வந்து விட்டது. சம்பவ இடத்தில் விஜு என்பவர் வந்தார். ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

05.06.2024ல் நான் கொத்தனார் வேலைக்கு எங்கு சென்றேன் என ஞாபகமில்லை. கொத்தனார் வேலை காலை 08.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை இருக்கும். மணலிக்கரை சந்திப்பிலிருந்து வாழவிளை முக்கு 200 மீட்டர் தூரம் இருக்கும். மணலிக்கரை ஆர்.சி தெரு செல்லும் சாலையில் வாழவிளைமுக்கு உள்ளது என்றால் சரிதான். நான் சந்தைக்கு 07.00 மணிக்கு வந்தேன். மணலிக்கரை சந்தையில் மாலை 07.00 மணிக்கு ஆட்கள் அதிகமாக இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் சந்தையில் வைத்து நடக்கவில்லை. சந்தைக்கு பின்பக்கம் நடந்தது. நான் பிரபு என்பவர் கடையில் பொருட்கள் வாங்கி கொண்டிருந்தேன். பிரபு கடை மணலிக்கரை சந்தைக்கு முன்பு உள்ளது. நான் சொன்னது போல் கடை அங்கு இல்லை என்றால் சரியல்ல. எனதுழ சொந்த ஊர் பூந்தோப்பு பகுதியில் உள்ள ஆலுவிளை என்றால் சரிதான். எனது சொந்த ஊர் மணலிக்கரை சந்தையிலிருந்து 5 கி.மீ துூரத்தில் உள்ளது என்றால் சரிதான். வாழவிளைமுக்கில் சுமார் 5 வருடங்களாக வாடகைக்கு குடியிருந்து வருகிறோம். ராஜேந்திரனை எனக்கு 10 வருடங்களாக தெரியும். அ.சா.2–க்கும், எனக்கும் பழக்கம் உண்டு. ராஜேந்திரனின் மனைவி கெட்டவார்த்தைகள் பேசினார் என்று போலீசாரிடம் சொல்லவில்லை. ராஜேந்திரனுக்கும், 2வது எதிரிக்கும் ¼ மணிநேரம் சண்டை நடந்தது. சம்பவ நடக்கும் போது ஆட்கள் கூடவில்லை, பார்த்து கொண்டிருந்தார்கள். சுமார் 10 பேர் பார்த்து கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் இருசக்கர வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பிரபு கடை எந்த திசை நோக்கி உள்ளது என்று எனக்குத் தெரியாது. ஆனால்

இடதுபக்கமாக உள்ளது என்று எனக்குத் தெரியும். சந்தைக்கு வலது பக்கம் சாயாக்கடை, கோழிக்கடை உள்ளது. சம்பவ நேரத்தில் பலசரக்கு கடை திறந்து இருந்தது. டீக்கடை பூட்டி இருந்தது. சம்பவ இடத்தில் ஆயுதங்கள் இல்லை. ராஜேந்திரன் குத்து பட்டு கீழே விழுந்தார். நான் பார்த்த கத்தி ஸ்டீல் கத்தி ஆகும். எதிரிகள் அ.சா.2ஐ குத்தியதும் சென்று விட்டார்கள். எதிரிகள் மணலிக்கரை ஆர்.சி தெரு சாலை வழியாக போனார்கள். எதிரிகள் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திலிருந்து சென்றார்கள். கத்தியையும் எதிரிகள் கொண்டு சென்று விட்டார்கள். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், அ.சா.2ம் நானும் நண்பர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதலுதவி சிகிச்சை செய்ய காயம்பட்டவரை அழைத்து செல்லவில்லை. 10 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்து விட்டது. காயம்பட்டவருடன் மருத்துவமனைக்கு விஜு போனார். என்னை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் விசாரித்தார்கள் பின்னர் என்னை வேறு எங்கு வைத்தும் விசாரிக்கவில்லை. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 317/2024**

**Deposition of P.W.** 4

Name : சுஜின்

S/o, D/o, W/o : ராஜா

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 15.10.2025

**Accused Present**

முதல் விசாரணை–

நான் வாழவிளைமுக்கில் வசித்து வருகிறேன். நான் கொத்தனாராக வேலை பார்க்கிறேன். அ.சா.3 எனது தம்பி. அ.சா.2 ராஜேந்திரனை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 2வது எதிரி ராஜேந்திரனின் மனைவி. 1வது எதிரி ,2வது எதிரியை தற்போது திருமணம் முடித்துள்ளார். 05.06.2024ம் தேதி மாலை 07.00 மணிக்கு மணலிக்கரை சந்தை அருகே ஆர்.சி தெரு செல்லும் பாதையில் 2வது எதிரியும், ராஜேந்திரனும் கெட்டவார்த்தை போட்டு பேசிய சத்தம்கேட்டு நானும், என் தம்பியும் போனோம். 2வது எதிரி 1வது எதிரியிடம் இவனை கொன்னால் தான் நாம் வாழமுடியும் என்று சொன்னார். 2வது எதிரி 1வது எதிரியை பார்த்து கண்ணை காட்டியதும், 1வது எதிரி கத்தியால் அ.சா.2ன் இடது பக்க வயிற்றில் குத்தி விட்டார். கத்தியால் குத்தியவுடன் இரு

எதிரிகளும் இருசக்கர வாகனத்தில் சென்று விட்டார்கள். காயம்பட்டவரை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து போனோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

05.06.2024ம் தேதி என் வீட்டு பக்கத்தில் வேலை பார்த்தோம். 06.00 மணிக்கு சித்திரங்கோடு போனோம். சித்திரங்கோட்டிலிருந்து அடையாமடை ¼ கி.மீ தூரம் இருக்கும். நான் வேலை தொடர்பாக அங்கு ½ மணி நேரம் இருந்தேன். சந்தைக்கு கிளம்பும் போது 06.30 மணி இருக்கும். மணலிக்கரை சந்தையிலிருந்து ஆர்.சி தெரு செல்லும் சாலையில் தான் எங்கள் வீடு உள்ளது. மணலிக்கரை சந்திப்பு என்பது நிறைய கடைகள் உள்ள பகுதி என்றால் சரிதான். சந்தையில் பொது மக்கள் நிறைய கூடுவார்கள் என்றால் அப்போது இல்லை. நான் பார்க்கும் போது 10, 15 பேர் இருந்தார்கள். 2வது எதிரி 2, 3 நிமிடம் கெட்டவார்த்தை போட்டு பேசினார். 2வது எதிரி இருசக்கர வாகனத்தை அருகில் இருந்த தெருவில் நிறுத்தி விட்டார். எதிரி பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை சம்பவ நாளன்று கால் வைக்கும் தூரத்தில் நிறுத்தி இருந்தார். கத்தியை சம்பவ இடத்தில் போட்டு விட்டு சென்று விட்டார்கள். கத்தியை போலீசாருக்கு வேறு நபர்கள் காட்டி கொடுத்தார்கள். போலீசார் கத்தியை எடுத்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை. மணலிக்கரை சந்தையிலிருந்து குமாரபுரம் செல்லும் சாலையில் எதிரிகள் சென்று விட்டார்கள். காயம்பட்டவர் தலைக்குப்புற கீழே விழுந்தார். காயம்பட்டவரை முதலுதவி சிகிச்சை செய்ய மணலிக்கரை மருத்துவமனைக்கு அழைத்துபோனோம் அங்கு எடுக்கவில்லை. அப்போது அ.சா.2 பேசும் நிலையில் தான் இருந்தார்.

ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு நான் தான் அழைத்து போனேன். மருத்துவரிடம் கத்தியால் குத்தப்பட்ட விபரத்தை சொன்னேன். 05.06.2024ம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள். காவல்நிலையத்தில் வைத்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1ன் நண்பர் என்ற முறையில் அ.சா.2ஐ தெரியும். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இரும்பு கம்பியில் விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.